



எனது பெயர், வீட்டு முகவரி, பெற்றோரின் தொலைபேசி இலக்கங்கள் மற்றும் தொலைபேசியை எவ்வாறு உபயோகிப்பது என்பவை எனக்குத் தெரியும்





தெரியாத நபர்கள் கொடுக்கின்ற பணம் பரிசுப் பொருட்களை ஒரு போதும் வாங்கக் கூடாது என்பதை நான் அறிவேன். நான் நன்கு அறிந்தவர்கள் இவற்றை தருவார்களாயினும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பெற்றோரின் அனுமதியுடனேயே அவற்றை பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதையும் நான் அறிவேன்.

நான் வலிமையானவன், அறிவானவன் மற்றும் என்னை பாதுகாத்துக்கொள்ள எனக்கு உரிமை உண்டு என்பதை நான் அறிவேன்.

நான் எப்பொழுதும் எங்கு செல்வதானானலும் எனது பெற்றோருக்கு அல்லது எனது பாதுகாவலருக்கு அறியப்படுத்துவேன். எனக்கு தெரிந்தவருடன் செல்வதானாலும் எனது பெற்றோர் மற்றும் பாதுகாவலர் அனுமதிப்பின் மட்டுமே செல்வேன். இவ்வாறு நான் அறியப்படுத்துவதால் எனக்கு ஏதேனும் ஆபத்து நேர்ந்தால் அல்லது காணாமல் போனால் எனது குடும்பத்தார் மற்றும் நண்பர்கள் நான் எங்கு சென்றிருப்பேன் என்பதை அறிந்து எனக்கு உதவ முடியும்





பாடசாலை வளாகத்தில், விளையாட்டு மைதானத்தில், சிறுவர் பூங்காவில் மற்றும் அயல்வீட்டு பிரதேசங்களில் தனியாக இருக்கக் கூடாது என்பதை நான் அறிவேன். நான் விளையாடச் செல்வதானாலும் வேறு எங்கு செல்வதானாலும் எனது நண்பரொருவருடனேயே செல்வேன்



நான் எப்பொழுதும் ஆள் நடமாட்டமுள்ள இடங்களிலேயே இருப்பேன். ஆள் நடமாட்டமற்ற குறுக்கு வழிப்பாதைகளில் எப்பொழுதும் செல்ல மாட்டேன்.



வாகனத்தினுள் இருந்து எவரேனுமொருவர் என்னை அழைத்தால் அருகில் செல்லவோ பதில் கூறவோ கூடாது என்பதை நான் அறிவேன்

யாரேனும் ஒருவர் என்னிடம் உதவி கோர அல்லது வழி கேட்க முயற்சிப்பின் அவர்களுக்கு பதிலளிக்க வேண்டிய அவசியமில்லை என்பதையும் வளர்ந்தவர்கள் வளர்ந்தவர்களிடமே உதவி கேட்க வேண்டும். சிறுவர்களிடம் உதவி கேட்கக் கூடாது என்பதையும் நான் அறிவேன்.





# என்னை பாதுகாத்துக்கொள்ள நான் அறிந்திருக்க வேண்டியவை

## சிறுவர்களுக்கான சுய பாதுகாப்பு வழிமுறைகள்



எனது பெற்றோர் அல்லது பாதுகாவலர் தவிர வேறு எவரேனும் நபரொருவர் என்னை எங்கேயாவது அழைத்துச் செல்ல முயற்சிற்பின் அல்லது என்னை பின் தொடரின் உடனடியாக அவ்விடத்தை விட்டு விலகி உதவி கேட்டு கூக்குரல் இட வேண்டும் என்பதை நான் அறிவேன்.



எவரேனுமொருவர் என்னை அச்சமூட்டும் வகையில் அசௌகரியப்படுத்தும் வகையில் மற்றும் குழப்பத்தில் ஆழ்த்தும் வகையில் தொடுவதற்கு முயற்சிப்பின் —வேண்டாம்˜ என்ககூறி மறுக்க வேண்டும் என்பதை நான் அறிவேன்



எவரேனும் ஒருவர் என்னை குழப்பத்தில் ஆழ்த்தும் வகையில் நடந்து கொண்டால் அச்சமூட்டினால், அசௌகரியத்துக்கு உட்படுத்தினால் எனது பெற்றோர்களுக்கு அல்லது நம்பிக்கைக்குரியவர்களுக்கு அதை தெரியப்படுத்த வேண்டும் என்பதை நான் அறிவேன்.




நான் பாடசாலையில், விளையாட்டு மைதானத்தில், பிரத்தியேக வகுப்புக்களில் இருக்கும் போது தெரியாத நபரொருவர் எனது பெற்றோர் அனுப்பியதாக கூறி அவசரமாக என்னை தன்னுடன் வருமாறு அழைத்தால் அல்லது வாகனத்தில் செல்ல அழைத்தால் உடனடியாக அருகிலிருக்கும் வளர்ந்தவர்களிடம் கூற வேண்டும் என்பதை அறிவேன். அவர் எனது பெயர் மற்றும் பெற்றோரின் பெயர்களைக் கூறினும் அவருடன் செல்ல கூடாது என்பதையும் நான் அறிவேன்



எனது அன்றாட நடவடிக்கைகள், அனுபவங்கள், உணர்வுகள் மற்றும் புதிய நபர்களுடனான சந்திப்புகள் தொடர்பில் எனது பெற்றோருடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்பதை நான் அறிவேன்.

ஆபத்தானவர்கள் யார் என்பதை நான் அறிவேன். எமது பாடசாலையில், வீட்டு அயலில் மற்றும் விளையாட்டு மைதானத்தில் சுற்றித்திரிபவர்கள், ஐஸ்கிரீம் விற்பவர்கள், கடை வைத்திருப்போர் மற்றும் எமது பாடசாலைக் காவலாளி இவர்களை நான் வழமையாக காண்கின்ற போதிலும் இவர்கள் ஆபத்தானவர்களாக இருக்கக் கூடும். ஆபத்தானவர்கள் அச்சுமூட்டும் உருவமுடையவர்களாக இருக்க வேண்டும் என்றில்லை. விரும்பத்தகுந்தவர்களாக அறிமுகமானவர்களாகவும் இருக்கலாம் என்பதையும் நான் அறிவேன்.










நான் தனியாக வீட்டில் இருக்கும் போது அறிமுகமற்றவர்கள் கதவைத் தட்டினால் திறக்கக்கூடாது என்பதையும் உறவினர்களாக இருப்பின் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பெற்றோரின் அனுமதியுடனேயே கதவை திறக்க வேண்டும் என்பதையும் நான் அறிவேன்

எனது நண்பனோ, வேறு ஒரு சிறுவனோ அல்லது சிறுமியோ துஷ்பிரயோகத்திற்கு அல்லது துன்புறுத்தலுக்கு இலக்காவதை நான் அறிந்தால் அதை பெற்றோருக்கு அறியப்படுத்த வேண்டும் என்பதை நான் அறிவேன்.

எனக்கு அல்லது நண்பரொருவருக்கு ஏதேனும் துஷ்பிரயோகம் அல்லது துன்புறுத்தல் இடம் பெற்றால் அல்லது இடம்பெற வாய்ப்பு இருப்பின்

**24 மணித்தியாலமும்**

**1929 சேவையிலிருக்கின்ற**

**இலங்கை சிறுவர் தொலைபேசி சேவைக்கு**

அழைப்பை ஏற்படுத்தி உதவி கோர முடியும் என்பதை நான் அறிவேன்.




NATIONAL CHILD PROTECTION AUTHORITY SRI LANKA

**தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை**

இல. 330, தலவத்துகொட வீதி, மாதிவெல. ஸ்ரீ ஜயவர்தனபுர.

தொலைபேசி: 011 2778912-14 | தொலைநகல் : 011 2778915 | இணையத்தளம்: www.childprotection.gov.lk | மின்னஞ்சல்: ncpa@childprotection.gov.lk


Designed & Printed by: M.D GUNASENA & CO. PRINTERS (PVT) LTD.